**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**

**அசல் வழக்கு எண். 274/2024**

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை திரு/திருமதி. கே. வசந்தா ன்பவரின் சாட்சியாக வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது ஏற்பாட்டின்படி **திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | K. வசந்தா | தொழில் | : | |
| தந்தை / கணவர் பெயர் | : | | வயது | : | |
| கிராமம் | : | | | : | |
| தாலுக்கா | : | | | | |

**பி.வா.சா.2 : முதல் விசாரணை :**

நான் தற்போது கஸ்பாபேட்டை 'A' கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். M.S. மங்கலம் சர்வே எண்.688/13 காலையானது எங்கள் கிராம கணக்குகளில் ரயத்துமனை நிறுத்தி வைக்கப்பட்டது என பதிவு செய்யப்பட்டுள்ளது. ரீ.ச.688/14 காலையானது எங்கள் கிராம கணக்குகளில் வீதி என வகைப்படுத்தப் பட்டுள்ளது. ரீ.ச.688/15 காலையானது எங்கள் கிராம கணக்குகளில் சர்க்கார் புறம்போக்கு நத்தம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சர்வே எண்.688/13 மற்றும் 15 ல் அருக்காணி என்பவர் பெயரில் பட்டா எதுவும் இல்லை. சர்வே எண்.688/13 மற்றும் 15 காலையில் வீடு இல்லை, ஒரு சிறு குடிசை மட்டும் தான் உள்ளது, அதற்கு கதவு எண் கொடுக்கப்பட்டதாக எங்கள் வருவாய்துறை ஆவணங்களின்படி மேற்படி சொத்துக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. மேலும் வீட்டிற்கு கதவு எண்ணானது பஞ்சாத்து சார்பாகத்தான் வழங்கப்படும்.மேற்படி குடிசையில் அருக்காணி வசிக்கவில்லை. மேற்படி குடிசையில் வசிப்பதற்கான எந்த அடிப்படை வசதியும் இல்லை.

**வாதி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.23 15:36:28 +0530